[2nd July 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கு ஒரு கல்லூரி இருப்பது அவசியம் என்பதை நான் மறுக்கவில்லை. தனிப்பட்டவர்கள் அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டால், அதற்கு அரசாங்கம் வேண்டிய உதவியை அளிக்கலாம்.

திரு. ம. கமலநாதன் : பிரிக்கப்பட இருக்கும் சேலம் மாவட்டத்திலே கிருஷ்ணகிரி தலைநகராக அமையப் போகின்றது என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நகரத்திலே கடந்த இரண்டு ஆண்டுகளாக கல்லூரி துவங்கப்படுமென்று, அதற்கு கால்கோள் விழாகூட நடத்தி விட்டார்கள். ஆனால் இன்னும் அதைப்பற்றி எந்தவிதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. கிருஷ்ணகிரி தலைநகராகப் போவதைக் கருதி, உடனடியாக அங்கு கல்லூரி ஏற்படுத்த அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கிருஷ்ணகிரியில் கல்லூரி அமைக்கப்படும் விஷயத்தைப் பற்றி தனியாக கேள்வி கேட்டால், நான் விவரமாக பதில் அளிக்கிறேன்.

The Madras Universityy Act

* 68 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received a resolution passed by the Senate of the University of Madras, recommending that the University Act should be revised; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : ஸார், யுனிவர்சிடியிலிருந்து அரசாங்கத்திற்கு வருவதற்கு காலதாமதமாகலாம். அவர்களுடைய நடவடிக்கைகளை பார்க்கிறபோது, அந்தமாதிரி அபிப்பிராயம் அதாவது சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற அபிப்பிராயம் யுனிவர்சிடிக்கும் இருக்கிறது. இதற்கு முன்பு பல முறை அரசாங்கத்தினரும் கூறி வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று யுனிவர்சிடியார் கூறுவிட்டாலும், அரசாங்கம் தாங்களாகவே சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பல்கலைக்கழக சம்பந்தப்பட்ட சட்டத்தை எவ்வாறாயினும் திருத்த வேண்டுமென்ற யோசனை அரசாங்கத்தில் இருந்து வருகிறது. அப்படித் திருத்துவதைப் பற்றி ஒரு குழு பரிசீலனை செய்து இருக்கிறது. அந்தக் குழு சிபார்சு செய்ததை, இப்போது அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

2nd July 1962]

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், தற்போது இன்டர்மீடியட் வகுப்பு பாஸ் செய்தவர்களைத்தான் பி.ஏ. வகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம் என்று பல்கலைக்கழகச் சட்ட விதியில் 36-வது செக்ஷன் 1-வது கிளாஸில் இருக்கிறது. ஆனால் இப்போது பி.யு.சி. வகுப்பு பாஸ் செய்தவர்கள் பி.ஏ. வகுப்பில் அனுமதிக்கப் படுகிறார்கள். இதற்கு இப்போது இருக்கிற பல்கலைக்கழக சட்டமே இடம் கொடுக்கவில்லை என்று கருதுகிறேன். இப்படி பலமாதிரியான நிலைமையில் இந்தச் சட்டம் இருப்பதால், இதை விரைவாகவும், உடனடியாகவும் திருத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டத்தின் கீழ் விதிகள் அதாவது பாட ரெகுலேஷன் இருக்கிறது. அந்த ரெகுலேஷன்படி பாட வகைகள் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது என்று நான் நினைக்கிறேன். ஆனால் இந்தச் சட்டத்தைத் திருத்துவது பற்றி அரசாங்கம் தாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுத்துக் கொள் வார்கள். ஆனால், அதை நன்றாக பரிசீலனை செய்து, பல பேர்கள் யோசனை செய்து, அதன்பேரில் பல்கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : ஸார், இந்த பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்தியமைப்பதில் நீண்டகாலமாகி விட்ட படியாலே, இப்போது அரசாங்க கல்வி கொள்கைக்குத் தக்கபடி சீக்கிரமாக அந்தச் சட்டத்தை மாற்றியமைக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி முன்பே விடை யளித்து விட்டேன்.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : ஸார், இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற நோக்கங்கள் யாவை ? சென்னை பல்கலைக் கழக சட்டம் மட்டும்தான் திருத்தியமைக்கப்படுமா ? அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டமும் திருத்தியமைக்கப் படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னென்ன வகையிலே இதைத் திருத்துவது என்ற விவரங்கள் தற்சமயம் என்னிடம் இல்லை. அதை பின்னால் பார்த்துத்தான் தெரிவிக்க முடியும். தமிழ் நாட்டிலே வெவ்வேறாக, இரண்டு பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆகவே, சட்டத்தைத் திருத்துவதிலும் அவைகளை ஒவ்வொன்றாகத் தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : ஸார், இது சம்பந்தமான ஒரு ஒயிட் பேப்பர் இந்தச் சபை முன்பு வைக்கப்பட்டு, அதன்மேல் அபிப்பிராயம் எடுத்துக்கொண்டு, அதன்பிறகு சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம். இதைப்பற்றி எல்லா வகையிலும் இந்த மன்றத்தின் அபிப்பிராயங்கள் கோரப்படும். நான் ஆரம்பத்திலே சொன்னபடி இதைப்பற்றி பரிசீலனை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் இந்தக் குழு திருத்தியமைத்த பிறகு, அதன் யோசனையைக் கேட்டு இந்த சபை முன்பு வைக்கப்பட்ட பிறகு தான் இந்த மசோதா சட்டமாக்கப்படும்.

Panchayat Union Council, Singampunari

69 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state the amount allotted to the Panchayat Union Council of Singampunari, Ramanathapuram district for the year 1960–61?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The following grants were released to the Union during 1960–61.

Local Education Grant of Rs. 1,15,780 and Local Roads Grant of Rs. 13,035.

திரு. எஸ். மாதவன் : இந்தத் தொகை யூனியன் டெரிடரியின் பரப்பளவைப் பொறுத்து அளிக்கப்படுகிறதா அல்லது மக்களின் தொகை கணக்கை வைத்து அளிக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I know from the Hon. Minister whether any special allotments are made to the Panchayat Union Councils?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியது போல், அந்தச் சட்டத்தில் எந்தெந்த வகையிலே சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்த வகையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

திரு. ம. கமலநாதன் : கிராண்டுகள் வழங்குவதிலே சட்டத்தை திருத்துவதற்கு அவசியம் இருக்கிறது. சில யூனியன்கள் பரப்பு அளவிலே மிகப் பெரியதாகவும், சில யூனியன்கள் பரப்பு அளவிலே மிகச் சிறியதாகவும் இருக்கின்றன. அந்த யூனியன்களுக்கு ரோடுகள் வசதி செய்வதற்கு மக்கள் தொகையின் அடிப்படையிலே ஒரு ஆளுக்கு 40 நயா பைசா வீதம் ஒதுக்கப்பட்டிருப்பதால், மிக அதிகப் பரப்பு உள்ள யூனியன்கள் ரோடு வசதி செய்து கொடுப்பதற்கு முடிவதில்லை. ஆகவே, கிராண்டுகள் வழங்குவது சம்பந்தமாக சட்டம் திருத்தி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் புதிய சட்டம் சமீபத்தில் தான் அமுலுக்கு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக நிலைமையைப் பரிசீலனை செய்வதற்கும், மேலும் எந்தெந்த வகை